செ.வெ.எண்.15 நாள்.07.12.2017.

## கோ-ஆப்டெக்ஸ் காந்திமதி விற்பனை நிலையத்தில் கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் 2018 சிறப்பு விற்பனை துவக்ககப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள கைத்தறி நிறுவனங்களிலேயே முதன்மை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் திகழ்வதற்கு நெசவாளர்களின் ஒத்துழைப்பும் வாடிக்கையாளர்களின் பேராதரவும் தான் முக்கிய காரணங்களாகும். வாடிக்கையாளர்களின் பேராதரவினால் 2016-17ஆம் ஆண்டில் ரூ.325.00 கோடி அளவிற்கு கோ-ஆப்டெக்ஸ் சில்லறை விற்பனை செய்து வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளின் பலனாகவும் வாடிக்கையாளர்களின் ஏகோபித்த பேராதரவினாலும் கோ-ஆப்டெக்ஸின் 82 ஆண்டு கால வரலாற்றில் இந்த சாதனை விற்பனை நிகழ்த்தப்பட்டுள்ளது. அதில் திருநெல்வேலி மண்டலத்தில் மட்டும் 2016-17 ஆண்டில் ரூ.28.19 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் 2018 சிறப்பு விற்பனை கோ-ஆப்டெக்ஸ் காந்திமதி விற்பனை நிலையத்தில் 01.12.2017 முதல் 23.01.2018 வரை நடைபெற உள்ளது.

கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் 2018 சிறப்பு விற்பனைக்காக பாரம்பரிய வடிவமைப்புகளில் காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், மென்பட்டுச் சேலைகள், காட்டன் சேலைகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், ஏற்றுமதி பெட்சீட் ரகங்கள், வேட்டிகள், துண்டுகள், ரெடிமேட் சட்டைகள், லினன் சட்டைகள் உள்பட அனைத்து ரகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

சிறப்பு தள்ளுபடி 30 சதவீதம் வரை வழங்கப்படுகிறது.

கடந்த வருடம் கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகைக்கு திருநெல்வேலி மண்டலத்தில் ரூ.480 லட்சங்கள் விற்பனை நடைபெற்றது. இந்த வருடம் கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகைக்கு ரூ. 600 லட்சங்கள் விற்பனை குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், காந்திமதி கோ-ஆப்டெக்ஸில் கடந்த வருடம் கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகைக்கு ரூ.90 லட்சங்கள் விற்பனையானது. இந்த வருடம் கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் விற்பனை குறியீடு ரூ.112 லட்சங்கள் ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**